Athiyaman Team Video Course For PC, SI Exam Call : 8681859181

# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்

## இரண்டாம் நிலை காவலர் (மாவட்ட மற்றும் மாநகர ஆயுதப்படை-ஆண், பெண் மற்றும் மூன்றாம்பாலினம்), இரண்டாம் நிலை காவலர் (தமிழ்நாடு சிறப்பு காவல்படை -ஆண்), இரண்டாம் நிலை சிறைக் காவலர் (ஆண் மற்றும் பெண்) மற்றும் தீயணைப்போர் (ஆண்) பதவிகளுக்கான பொதுத் தேர்வு-2017

(தேர்வு குறியீட்டு எண். 1)

விளம்பர எண். 117

I இந்தியக் குடியுரிமையுடைய கீழ்க்காணும் தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து இரண்டாம் நிலை காவலர் (மாவட்ட மற்றும் மாநகர ஆயுதப்படை-ஆண், பெண் மற்றும் மூன்றாம்பாலினம்), இரண்டாம் நிலை காவலர் (தமிழ்நாடு சிறப்பு காவல்படை -ஆண்), இரண்டாம் நிலை சிறைக் காவலர் (ஆண் மற்றும் பெண்) மற்றும் தீயணைப்போர் (ஆண்) பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் தமிழகத்திலுள்ள *284* குறிப்பிட்ட தபால் நிலையங்களில் கிடைக்கும். தபால் நிலையங்களின் விவரங்களை இக்குழுமத்தின் www.tnusrb.tn.gov.in இணையதளத்தில் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

II தகவல் சிற்றேட்டினை பதிவிறக்கம் செய்தல்:

இத்தேர்வுக்குரிய விவரங்கள் அடங்கிய தகவல் சிற்றேடு இக்குழும www.tnusrb.tn.gov.in இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை நிரப்பம் செய்வதற்கு முன்னர் இத்தகவல் சிற்றேட்டினை பதிவிறக்கம் செய்து அதனை கவனமாக படித்து அவற்றில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளின்படி விண்ணப்பத்தினை நிரப்ப வேண்டும்.

athiyamanteam.com

III காலிப்பணியிடங்களின் மொத்த எண்ணிக்கை: 15664 + 47 [பின்னடைவுக் காலிப்பணியிடங்கள் (Back Log) பிற்படுத்தப்பட்ட இஸ்லாமிய பெண்களுக்கானது]

| | | பொது / ஆண்கள் | பெண்கள் | மொத்தம் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|---|
| காவல்துறை | இரண்டாம் நிலை காவலர் (தமிழ்நாடு சிறப்பு காவல்படை) | 4569 | 46 ( BCM-BL) | 4569 + 46 (BL) | ரூ.5200-20200 + தரஊதியம் ரூ.1900 |
| | இரண்டாம் நிலை காவலர் (ஆயுதப்படை) | 4627 | 3941 | 8568 | |
| | மொத்தம் | 9196 | 3941+46 ( BCM-BL) | 13137 + 46 (BL) | |
| சிறைத்துறை | இரண்டாம் நிலை சிறைக் காவலர் | 976 | 39+1 ( BCM-BL) | 1015 + 1 (BL) | |
| தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை | தீயணைப்போர் | 1512 | - | 1512 | |

Athiyaman Team Video Course For PC, SI Exam Call : 8681859181

IV மாவட்ட மற்றும் மாநகர ஆயுதப்படைக்கான பொது காலிப்பணியிடங்களில் பெண்கள் மற்றும் மூன்றாம்பாலினத்தவர்கள் போட்டியிடவும் தகுதியுடையவராவார்கள். மாவட்ட மற்றும் மாநகர ஆயுதப்படைக்கான பெண்கள் மற்றும் மூன்றாம்பாலினத்தவர்கள் காலிப்பணியிடத்தில் தெரிவு செய்யப்பட தேர்ச்சியும், தகுதியும் வாய்ந்த பெண் அல்லது மூன்றாம்பாலினத்து விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாவிடில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட காலிப்பணியிடங்களில் அதே பிரிவைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு இறுதி தற்காலிகத் தெரிவின் பொழுது (Final Provisional Selection) நிரப்பப்படும்.

V வகுப்புவாரி இடஒதுக்கீடு

a) தற்போது நடைமுறையிலுள்ள விதிகள் மற்றும் அரசாணைகளின்படி வகுப்புவாரி இட ஒதுக்கீடு:-
பொது போட்டி - 31%, பிற்படுத்தப்பட்டோர் - 26.5%, பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்) - 3.5%, மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் - 20%, ஆதிதிராவிடர் - 18% [இதில் ஆதிதிராவிடர் (அருந்ததியர்) வகுப்பினருக்கு - 3% உள்ஒதுக்கீடு] மற்றும் பழங்குடியினர் - 1% வழங்கப்படும்.

b) ஆதிதிராவிடர் (அருந்ததியர்) வகுப்பினருக்கான 3% இடங்கள் முன்னுரிமையில் நிரப்பப்பட்ட பின்னர், தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் மிகுதியாக இருந்தால் அவர்கள் ஆதிதிராவிடர் வகுப்பினருக்கான ஒதுக்கீட்டின் கீழும் தெரிவு செய்யப்படுவார்கள். ஆதிதிராவிடர் (அருந்ததியர்) இட ஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்பட தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில் அப்பதவியிடங்கள் ஆதிதிராவிடர் (அருந்ததியர்) வகுப்பினர் அல்லாத பிற ஆதிதிராவிடர் வகுப்பினரைச் சார்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

VI சிறப்பு ஒதுக்கீடுகள்:

A) விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீடு

1) இரண்டாம் நிலை காவலர்கள், இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் மற்றும் தீயணைப்போருக்கான மொத்த காலிப் பணியிடங்களில் 10% பணியிடங்கள் விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்படும்.

2) விளையாட்டு படிவம்:
விளையாட்டுக்கான 10% ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் பொது விண்ணப்பதாரர்களைப் போலவே எழுத்துத் தேர்வு மற்றும் அதனை தொடர்ந்து பிற போட்டிகளிலும் கலந்து கொள்ள வேண்டும்.

3) அத்துடன் கீழ்க்காணும் 15 அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஏதேனும் ஒன்றிலோ அல்லது அதற்கு மேற்பட்ட விளையாட்டுகளிலோ பங்கேற்றதற்கான படிவம் I, படிவம் II அல்லது படிவம் III-ஐ பெற்றிருக்க வேண்டும்.

athiyamanteam.com

Athiyaman Team Video Course For PC, SI Exam Call : 8681859181

4) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுகள் :

1. கூடைப்பந்து 2. கால்பந்து 3. ஹாக்கி 4. கையுந்துபந்து 5. கைபந்து 6. கபடி 7. மல்யுத்தம் 8. குத்துச்சண்டை 9. ஜிம்னாஸ்டிக்ஸ் 10. ஜூடோ 11. பளு தூக்குதல் 12. நீச்சல் போட்டி 13. தடகள போட்டிகள் 14. குதிரையேற்றம், 15. துப்பாக்கி சுடுதல்.

5) விளையாட்டுப் படிவம் I /படிவம் II /படிவம் III-ஐ இவ்வறிவிப்பு தேதிக்கு முன்னர் 5 ஆண்டுகளுக்குள் விளையாட்டில் கலந்துகொண்டு விளையாட்டுப் படிவம் பெற்றவர்கள் மட்டும் இவ்வொதுக்கீட்டின் கீழ் பரிசீலனை செய்யப்படுவார்கள்.

6) விளையாட்டுப் படிவம் I /படிவம் II /படிவம் III-ஐ விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பாமல் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விளையாட்டு படிவங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

B) சார்ந்துள்ள வாரிசு:

1) இரண்டாம் நிலைக் காவலர்கள், இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் மற்றும் தீயணைப்போரின் மொத்த காலிப் பணியிடத்தில் 10% காவல்துறை, சிறைத்துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையைச் சேர்ந்த பணியிலுள்ள/ஓய்வு பெற்ற/மரணமடைந்த/மருத்துவ ரீதியாக ஓய்வுபெற்ற களப்பணியாளர்களை சார்ந்துள்ள வாரிசுகளைக் கொண்டும் மற்றும் இந்த 10% -ல் 10% பணியிலுள்ள காவல்துறை, சிறைத்துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையைச் சேர்ந்த அமைச்சுப் பணியாளர்களை சார்ந்துள்ள வாரிசுகளைக் கொண்டும் நிரப்பப்படும்.

athiyamanteam.com

2) சார்ந்துள்ள வாரிசுக்கான ஒதுக்கீட்டின்கீழ் விண்ணப்பிக்கும் பெண் விண்ணப்பதாரர்கள், விண்ணப்பிக்கும் நாளன்று திருமணம் ஆகாதவராக இருத்தல் வேண்டும். பெண் விண்ணப்பதாரர், விண்ணப்பம் சமர்ப்பித்தபின் திருமணம் செய்துகொண்டால் அவரது விண்ணப்பம் சார்ந்துள்ள வாரிசுக்கான ஒதுக்கீட்டின்கீழ் ஏற்றுக் கொள்ளப்படும்.

3) சார்ந்துள்ள வாரிசுக்கான சான்றிதழ், தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தின்படி அந்தந்தத் துறைக்கான காவல் கண்காணிப்பாளர் பதவி நிலைக்கு குறையாத அதிகாரியிடத்தில் இவ்வறிவுப்புத் தேதிக்குப் பின்னர் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பிற தேர்வுகளுக்காக பெறப்பட்ட பழைய சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4) முறையான படிவத்தில் சார்ந்துள்ள வாரிசுக்கான சான்றிதழைப் பெற்று விண்ணப்பத்துடன் அனுப்பத் தவறும் விண்ணப்பதாரர்கள் பொது விண்ணப்பதாரரர்களாகக் கருதப்படுவார்கள்.

5) சார்ந்துள்ள வாரிசுதாரர்கள் மத்திய அல்லது மாநில அரசின் பணியிலிருந்தால் சார்ந்துள்ள வாரிசுக்கான ஒதுக்கீட்டின்கீழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள்.

Athiyaman Team Video Course For PC, SI Exam Call : 8681859181

6) சார்ந்துள்ள வாரிசுக்கான சான்றிதழை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பாமல் பின்னர் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
(மாதிரிச் சான்றிதழ் தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது)

C) முன்னாள் இராணுவத்தினர், மத்திய துணை இராணுவப் படையினர் மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்கள்:

1) மொத்த காலிப்பணியிடத்தில் 5% முன்னாள் இராணுவத்தினர், மத்திய துணை இராணுவப் படையினர் மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்களுக்கு ஒதுக்கப்படும்.
2) முன்னாள் இராணுவத்தினர் மற்றும் மத்திய துணை இராணுவப் படையினர் அவர்களது விண்ணப்பத்துடன் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட சான்றிதழை (Discharge certificate) இணைத்தனுப்ப வேண்டும்
3) இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் அவர்களது விண்ணப்பத்துடன் தங்களது படை பிரிவு அலுவலரிடத்தில் (Commanding Officer) உரிய படிவத்தில் சான்றிதழ் பெற்று விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும்.
4) முன்னாள் இராணுவத்தினர் மற்றும் மத்திய துணை இராணுவப் படையினர், இராணுவ / மத்திய துணை இராணுவப் படையிலிருந்து விடுவிக்கப்பட்ட சான்றிதழை (Discharge certificate) விண்ணப்பத்துடன், இணைத்தனுப்ப தவறினால், அவர்கள் 5% இடஒதுக்கீட்டின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டார்கள்.
5) முன்னாள் இராணுவத்தினர் மற்றும் மத்திய துணை இராணுவப்படையினர் இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட தேதியில் இருந்து மூன்றாண்டு நிறைவு செய்யாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.
6) முன்னாள் இராணுவ மற்றும் மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு ஏதேனும் அரசுப் பணியில் (Any class or service or category) பணியமர்த்தப்பட்டிருந்தால் இத்தேர்வில், அவர்கள் முன்னாள் இராணுவத்தினர் என்பதற்கான சலுகைகளைக் கோர இயலாது.
7) இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் அவர்களது விண்ணப்பத்துடன் தங்களது படைப் பிரிவு அலுவலரிடத்தில் (Commanding Officer) உரிய படிவத்தில் பெறப்பட்ட சான்றிதழுடன் கூடிய சுயஉறுதிமொழியினை விண்ணப்பத்துடன் அனுப்ப தவறினால் அவர்கள் 5% இடஒதுக்கீட்டின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டார்கள்.
(மாதிரிச் சான்றிதழ் தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது)

athiyamanteam.com

Athiyaman Team Video Course For PC, SI Exam Call : 8681859181

D) ஆதரவற்ற விதவை (**Destitute Widow**):

1) பெண்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்களுக்கான 30% காலிப் பணியிடங்களில் 10% ஆதரவற்ற விதவைகளுக்கு ஒதுக்கப்படும்.
2) ஆதரவற்ற விதவைக்கான சான்றிதழை வருவாய் கோட்டாட்சியர் (RDO)/ துணை ஆட்சியர் (Sub-Collector) / உதவி ஆட்சியர் (Assistant Collector) அவர்களிடமிருந்து பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
3) ஆதரவற்ற விதவைக்கான சான்றிதழை வருவாய் கோட்டாட்சியர் (RDO) / துணை ஆட்சியர் (Sub-Collector) / உதவி ஆட்சியர் (Assistant Collector) அவர்களிடமிருந்து பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம் ஆதரவற்ற விதவைக்கான ஒதுக்கீட்டின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டாது.
4) சிறப்பு ஒதுக்கீட்டிற்கான தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்கள் நடைமுறையில் உள்ள விதிகளின்படி நிரப்பப்படும்.
(மாதிரிச் சான்றிதழ் தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது)

athiyamanteam.com

VII பத்தாம் வகுப்பு கல்வித்தகுதியினை தமிழ் பயிற்று மொழியில் பயின்றதற்கான 20% முன்னுரிமை:

a) பத்தாம் வகுப்பினை, தமிழ் பயிற்று மொழியில் (Tamil Medium) பயின்றவர்களுக்கு இறுதித் தெரிவின் போது அதாவது தற்காலிகத் தேர்வுப் பட்டியல் தயாரிக்கும் பொழுது 20% முன்னுரிமை அளிக்கப்படும்.

b) விண்ணப்பதாரரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் / பள்ளி மாற்றுச் சான்றிதழில் இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியினை அவர் தமிழ் பயிற்று மொழியில் (Tamil Medium) பயின்றுள்ளார் என்ற விவரம் இல்லாதிருந்தால், அவர் பயின்ற கல்வி நிலையத்திலிருந்து அவர் பத்தாம் வகுப்பு கல்வியை தமிழ் பயிற்று மொழியில் படித்துள்ளார் என்பதற்கான சான்றிதழைப் பெற்று விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

c) இவ்வாறு உரிய சான்றிதழ் இணைத்து அனுப்பாத விண்ணப்பதாரர்கள் இறுதித் தெரிவின் போது (Provisional Selection List) 20% முன்னுரிமை அடிப்படையின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டார்.
(மாதிரி சான்றிதழ் தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது).

VIII திருநங்கைகள் (Transgenders):

a) திருநங்கைகள், ஆண் அல்லது பெண் அல்லது மூன்றாம்பாலினம் என ஏதேனும் ஒன்றினை தனது பாலினமாக தேர்வு செய்துகொள்ளலாம். திருநங்கைகள் மூன்றாம்பாலினத்தவரென விண்ணப்பம் செய்தால் தங்களது விண்ணப்பத்துடன், தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரியத்திலிருந்து பெறப்பட்ட அடையாள

Athiyaman Team Video Course For PC, SI Exam Call : 8681859181

அட்டையின் நகலினை இணைத்து அனுப்பவேண்டும்.
(மாதிரி அடையாள அட்டை தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது).

b) திருநங்கைகள், ஆண் பாலினத்தை தேர்வு செய்தால் ஆண்களுக்கான உடற்கூறு அளத்தல், உடல்தகுதித் தேர்வு மற்றும் உடல்திறன் போட்டிகளிலும், பெண் அல்லது மூன்றாம் பாலினத்தை தேர்வு செய்தால் பெண்களுக்கான உடற்கூறு அளத்தல், உடல்தகுதித் தேர்வு மற்றும் உடல்திறன் போட்டிகளிலும் கலந்து கொள்ளவேண்டும்,

c) திருநங்கைகள், மூன்றாம்பாலினத்தவரென விண்ணப்பித்தால் இவர்கள் பாலினத்தில் பெண் விண்ணப்பதாரர்களாகப் பாவிக்கப்படுவார்கள். மேலும், இவர்களுக்கு பெண்களுக்கான 30% இட ஒதுக்கீடு பொருந்தும்.

d) திருநங்கைகள், தனது சாதிக்குரிய சாதிச்சான்றிதழை சமா்ப்பித்தால், அவர்கள் பிற விண்ணப்பதாரர்களைப் போன்று அவரவர் வகுப்புவாரி ஒதுக்கீடு பெறலாம்.

e) திருநங்கைகள், சாதிச்சான்றிதழ் சமர்ப்பிக்காவிடில் அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகப் பாவிக்கப்படுவர்.

IX இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே அரசுப்பணியிலிருந்தால் அவர்கள் தாங்கள் பணிபுரியும் அலுவலக தலைவரிடமிருந்து தடையில்லா சான்று பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

X பதவி முன்னுரிமை **(Post Preference)**

(a) இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் தாங்கள் விரும்பும் பதவிக்கான (AR/TSP/Jailwarder/Fireman) விருப்பத்தினை முன்னுரிமைப்படி வரிசைகிரமமாக OMR விண்ணப்பப்படிவத்தில் வரிசை எண்.16-ல் தவறாமல் நிரப்ப வேண்டும். விண்ணப்பதாரா் OMR விண்ணப்பப்படிவத்தில் தான் விரும்பும் பதவிக்கு கொடுத்துள்ள முன்னுரிமை மற்றும் மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

(b) விண்ணப்பதாரர்கள் பிற பதவிக்கான மதிப்பெண் பெற்றிருந்தாலும் முன்னுரிமை கோரிய பதவிக்கே தெரிவு செய்யப்படுவார்கள். பின்னா் கோரும் எந்தவிதமான பதவி மாற்ற வேண்டுதல், எக்காரணத்தை முன்னிட்டும் பரிசீலிக்கப்படமாட்டாது.

XI விண்ணப்பதாரர்களுக்கான வயதுத் தகுதி:

1) 01.07.2017 அன்று 18 வயது நிறைவு பெற்றவராக இருக்க வேண்டும். (01.07.1999 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிறந்திருக்க வேண்டும்).

2) 24 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். (01.07.1993 க்கு பின்னா் பிறந்திருக்க வேண்டும்).

3) பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினா் வகுப்பினைச் சார்ந்தவர்கள் 01.07.2017 அன்று 18 வயது நிறைவு பெற்றவராகவும் 26 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும் (அதாவது *01.07.1991* க்கு பின்னா் பிறந்திருக்க வேண்டும்).

athiyamanteam.com

Athiyaman Team Video Course For PC, SI Exam Call : 8681859181

4) ஆதி திராவிடர், ஆதி திராவிடர் (அருந்ததியர்) மற்றும் பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்தவர்கள் 01.07.2017 அன்று 18 வயது நிறைவு பெற்றவராகவும் 29 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (அதாவது 01.07.1988 க்கு பின்னர் பிறந்திருக்க வேண்டும்).

5) முன்னாள் இராணுவத்தினர், மத்திய துணை இராணுவப்படையினர் மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் 01.07.2017 அன்று 45 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும் (அதாவது 01.07.1972 க்கு பின்னர் பிறந்திருக்க வேண்டும்).

6) ஆதரவற்ற விதவைகள் எந்த வகுப்பைச் சார்ந்தவராக இருந்தாலும் 01.07.2017 அன்று 18 வயது நிறைவு அடைந்தவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (அதாவது 01.07.1982 க்கு பின்னர் பிறந்திருக்க வேண்டும்).

XII கல்வித் தகுதி:

(a) 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(b) விண்ணப்பதாரர் 10-ம் வகுப்பில் தமிழை ஒரு மொழிப் பாடமாக படித்திருக்க வேண்டும். இல்லையெனில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் இரண்டாம் நிலை தமிழ்த் தேர்வில் பணியில் சேர்ந்த இரண்டாண்டுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

(c) பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு சமமான கல்வியில் தேர்ச்சி பெறாதவர்கள் அதற்கு மேற்பட்ட கல்வித்தகுதியினைப் பெற்றிருந்தாலும் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

athiyamanteam.com

XIII உடற்கூறு அளவுகள்:

ஆண்கள்:

1) உயரம் குறைந்த அளவு 170 செ.மீ இருத்தல் வேண்டும். ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்) பழங்குடியினர் உயரம் குறைந்த அளவு 167 செ.மீ இருத்தல் வேண்டும்.

2) மார்பளவு அனைத்து வகுப்பினருக்கும் சாதாரண நிலையில் குறைந்தபட்சம் 81 செ.மீ இருக்க வேண்டும். மூச்சடக்கிய நிலையில் குறைந்தபட்சம் 5 செ.மீ. மார்பு விரிவாக்கம் (Expansion) இருத்தல் வேண்டும்.

3) முன்னாள் இராணுவ, மத்திய துணை இராணுவப் படை மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் அனைவருக்கும் உடற்கூறு அளத்தல் மற்றும் மார்பளவு அளத்தல் தேர்வு கிடையாது. இவர்கள் பிற அனைத்து தேர்வுகளிலும் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும்.

Athiyaman Team Video Course For PC, SI Exam Call : 8681859181

பெண்கள்/ மூன்றாம் பாலினம்: உயரம் குறைந்த அளவு 159 செ.மீ இருத்தல் வேண்டும். ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்)/ பழங்குடியினர் குறைந்த அளவு 157 செ.மீ இருத்தல் வேண்டும்.

XIV விண்ணப்பக் கட்டணம்:

தெரிவு செய்யப்பட்ட *284* அஞ்சல் நிலையங்களில் ரூ.30/- ஐ செலுத்தி OMR விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக் கொள்ளலாம். OMR விண்ணப்பப்படிவங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

XV தேர்வுக் கட்டணம்:

விண்ணப்பதாரர்கள் தேர்வுக் கட்டணம் ரூ. 135/-ஐ அஞ்சலகத்தில் செலுத்தி, அதற்கான இரசீதைப் பெற்று, விவரங்கள் நிரப்பிய OMR விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

XVI **விண்ணப்பம் அனுப்புதல்:**

நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள், OMR படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள தேவையான சான்றிதழ்களுடன், விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கடைசி தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இக்குழும அலுவலகத்தை வந்தடைய வேண்டும். விண்ணப்பம் பெற நிர்ணயிக்கப்பட்ட கடைசித் தேதி 22.02.2017 அன்று மாலை 5.45 மணிக்கு பிறகு தாமதமாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

athiyamanteam.com

XVII எழுத்துத் தேர்வு:

எழுத்துத் தேர்விற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் 80 மதிப்பெண்களில்

a) பகுதி - அ பொது அறிவு (General Knowledge) - 50 மதிப்பெண்கள் கொள்குறி வகை (Objective Type Question)
b) பகுதி - ஆ உளவியல் (Psychology) ï 30 மதிப்பெண்கள் கொள்குறி வகை (Objective Type Question) என்று பிரிக்கப்படும். எழுத்து தேர்வில் குறைந்தபட்சம் 28 மதிப்பெண்கள் விண்ணப்பதாரர்கள் பெற வேண்டும்.
c) எழுத்து தேர்வில் குறைந்த பட்சம் 28 மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும், தேர்ச்சி பெற்ற அனைவரின் அதிகபட்ச மதிப்பெண்களின் அடிப்படையில் மொத்த காலிப்பணியிட எண்ணிக்கைக்கு ஏற்றவாறு வகுப்பு வாரி விகிதாச்சாரப்படி 1:5 விண்ணப்பதாரர்கள் மட்டும் அடுத்தகட்ட தேர்வான, உடல் கூறு அளத்தல். உடல் தகுதித் தேர்வு, உடல் திறன் போட்டி மற்றும் அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல் ஆகியவற்றிற்கு அழைக்கப்படுவார்கள்.

Athiyaman Team Video Course For PC, SI Exam Call : 8681859181

XVIII உடல் தகுதித் தேர்வு:

a) ஆண் விண்ணப்பதாரர்களில் 1500 மீட்டர் ஓட்டத்தினை 7 (ஏழு) நிமிடங்களில் முடிப்பவர்கள் மட்டுமே அடுத்தகட்ட உடல் திறன் போட்டிக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

b) பெண் / மூன்றாம்பாலின விண்ணப்பதாரர்களில் 400 மீட்டர் ஓட்டத்தினை 2 நிமிடம் 30 விநாடிகளில் முடிப்பவர்கள் மட்டுமே அடுத்தகட்ட உடல் திறன் போட்டிக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

c) முன்னாள் இராணுவ, மத்திய துணை இராணுவப் படை மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்களில் 1500 மீட்டர் தூரத்தை 8 (எட்டு) நிமிடங்களில் முடிப்பவர்கள் மட்டுமே அடுத்தகட்ட உடல் திறன் போட்டிக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

XIX உடல் திறன் போட்டி:

a) உடல் திறன் போட்டிகளில் ஆண்களுக்கு கயிறு ஏறுதல், நீளம் தாண்டுதல் (அல்லது) உயரம் தாண்டுதல், 100 மீட்டர் (அல்லது) 400 மீட்டர் ஓட்டம் நடத்தப்படும், இப்போட்டிகளில் ஒவ்வொன்றிலும் குறைந்த பட்சம் ஒரு நட்சத்திர திறன் பெறவேண்டும்.

athiyamanteam.com

b) உடல் திறன் போட்டிகளில் பெண்/மூன்றாம்பாலினத்தினவருக்கு நீளம் தாண்டுதல், கிரிக்கெட் பந்து எறிதல் (அல்லது) குண்டு எறிதல், 100 மீட்டர் (அல்லது) 200 மீட்டர் ஓட்டம் ஆகிய போட்டிகள் நடத்தப்படும். இப்போட்டிகளில் ஒவ்வொன்றிலும் குறைந்த பட்சம் ஒரு நட்சத்திர திறன் பெறவேண்டும்.

c) உடல் திறன் போட்டிகளில் முன்னாள் இராணுவ, மத்திய துணை இராணுவப் படை மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவ, மத்திய துணை இராணுவப் படை வீரர்களுக்கு குண்டு எறிதல், நீளம் தாண்டுதல் (அல்லது) உயரம் தாண்டுதல் மற்றும் 100 மீட்டர் (அல்லது) 400 மீட்டர் ஓட்டம் நடத்தப்படும். இப்போட்டிகளில் ஒவ்வொன்றிலும் குறைந்த பட்சம் ஒரு நட்சத்திர திறன் பெறவேண்டும்.

d) விண்ணப்பதாரர்கள் கலந்துகொள்ளும் உடல் திறன் போட்டிகள் விவரம், நட்சத்திர திறன் மற்றும் மதிப்பெண்கள் விவரம் இக்குழும இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள தகவல் சிற்றேட்டில் முழுமையாக அளிக்கப்பட்டுள்ளன.

XX மொத்த மதிப்பெண்கள்:

a) இத்தேர்விற்கான மதிப்பெண்கள் விவரம் : மொத்த மதிப்பெண்கள் = 100

(1) எழுத்துத் தேர்வு = 80 மதிப்பெண்கள்

(2) உடல் திறன் போட்டி = 15 மதிப்பெண்கள்

(3) NCC, NSS, Sports / Games சான்றிதழ்களுக்கான சிறப்பு மதிப்பெண்கள் = 5 (தகவல் சிற்றேட்டில் குறிப்பிட்டுள்ளபடி இச்சான்றிதழ்களுக்கு மதிப்பெண்கள் வழங்கப்படும்).

b) NCC, NSS, Sports / Games சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பின்னர் சமர்ப்பிக்கப்படும் NCC, NSS, Sports / Games சான்றிதழ்களுக்கு சிறப்பு மதிப்பெண்கள் வழங்கப்படமாட்டாது.

c) NCC, NSS, Sports / Games சான்றிதழ்களுக்கான சிறப்பு மதிப்பெண்கள் உடல்திறன் போட்டியில் தேர்ச்சி பெற்ற பின்னர் வழங்கப்படும்.

XXI இறுதி தற்காலிகத் தெரிவுப் பட்டியல்:

a) எழுத்துத் தேர்வு, உடல் திறன் போட்டி மற்றும் NCC, NSS, Sports/Games சான்றிதழ்களுக்கான சிறப்பு மதிப்பெண்கள் ஆகியவற்றில் பெறும் மொத்த உயர்ந்தபட்ச மதிப்பெண்களின் அடிப்படையிலும் மற்றும் விண்ணப்பதாரர் தெரிவித்துள்ள பதவி விருப்ப முன்னுரிமைப்படியும், காலியிடங்களுக்கு ஏற்ப வகுப்புவாரி விகிதாச்சாரத்தின்படி மாவட்ட/மாநகர ஆயுதப்படை, தமிழ்நாடு சிறப்பு காவல் படை, இரண்டாம் நிலை சிறைக்காவலர் மற்றும் தீயணைப்போர் பதவிக்கு தற்காலிகமாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

b) இறுதி தற்காலிகத் தெரிவின் பொழுது ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் ஒரே தகுதி மதிப்பெண் பெற்றிருந்தால் பிறந்த தேதியின் அடிப்படையில் வயதில் மூத்தவருக்கு இறுதி தற்காலிகத் தெரிவின் பொழுது முன்னுரிமை அளிக்கப்படும்.

c) இறுதியாகத் தற்காலிகமாக தெரிவு செய்யப்படுபவர்களின் பட்டியல் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழும இணையதளமான www.tnusrb.tn.gov.in ïல் வெளியிடப்படும்.

athiyamanteam.com

XXII மருத்துவப் பரிசோதனை மற்றும் முந்தைய பழக்கவழக்கங்கள் மற்றும் குணநலன்கள் குறித்த விசாரணை:

இரண்டாம் நிலை காவலர்கள் (மாவட்ட மாநகர மற்றும் ஆயுதப்படை), இரண்டாம் நிலை காவலர்கள் (தமிழ்நாடு சிறப்பு காவல்படை), இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் மற்றும் தீயணைப்போர் பதவிகளுக்கு தற்காலிகமாகத் தெரிவு செய்யப்படுபவர்கள், மருத்துவப் பரிசோதனைக்கும், முந்தைய பழக்க வழக்கங்கள் மற்றும் குணநலன்கள் குறித்த காவல் விசாரணைக்கும் காவல், சிறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மூலமாக உட்படுத்தப்படுவார்கள்.

XXIII இவ்விளம்பரம் மற்றும் தகவல் சிற்றேடு இக்குழும www.tnusrb.tn.gov.in இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

XXIV ***OMR விண்ணப்பப்படிவத்தின் மேல்பகுதியில் தமிழில்*** “OMR ***விண்ணப்பப்படிவம்*** For Grade II PC, JW and Fireman -2016” ***எனவும் ஆங்கிலத்தில்*** “OMR APPLICATION FORM FOR Grade II PC, JW and Firemen ï 2016” ***எனவும் அச்சாகி உள்ளவற்றை தமிழில்*** “OMR ***விண்ணப்பப்படிவம்*** For Grade II PC, JW and Fireman -2017” ***எனவும் ஆங்கிலத்தில்*** “OMR APPLICATION FORM FOR Grade II PC, JW and Firemen ï 2017” ***எனவும் கொள்ளவும். மேலும்*** OMR ***விண்ணப்பப்படிவத்தில் வரிசை எண்.3ல் உள்ள விளம்பர எண் /*** Advertisement Number 116 ***என்பதை 117 எனக்கொண்டு அதற்குரிய கட்டங்களில் கருமையாக்கவும்.***

Athiyaman Team Video Course For PC, SI Exam Call : 8681859181

XXV முக்கியத் தேதிகள்:

| | | | |
|---|---|---|---|
| 1) | தபால் நிலையங்களில் விண்ணப்பங்கள் கிடைக்கும் நாள் | 23.01.2017 | காலை 10.00 மணி |
| 2) | நிரப்பிய விண்ணப்பங்கள் இக்குழுமத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் | 22.02.2017 | மாலை 05.45 மணி |
| 3) | எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் | 21.05.2017 | காலை 09.00 மணி |

உறுப்பினர் செயலாளர்,
தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்,
சென்னை - 8.

athiyamanteam.com